நாள்.19.01.2023

**அசல் வழக்கு எண். 39/2016**

**பி.வா.சா.1 ஆஜர் 4-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்துள்ளார்.**

**பி.வா.சா.1 - 7-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

வாதி 2012ம் ஆண்டுக்கு 3ம் தரப்பினர் செய்த அன்னதானத்திற்கு கோவில் நிர்வாகத்தினரிடமிருந்து கோவில் பணத்தை எடுத்து அன்னதானம் கொட்டகை போட்டது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 5-ம் எதிர்வாதி 2013ம் ஆண்டு முதல் 2015 வரை 3ம் தரப்பினர் செய்த அன்னதானத்திற்கு கோவில் பணத்தை எடுத்து அன்னதானம் கொட்டகை போட்டது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.1 ன் படி 3ம் தரப்பினர் செய்யும் அன்னதானம் மற்றும் மற்ற காரியங்களுக்கு கோவிலுக்கு சொந்தமான நிதியிலிருந்து செலவு செய்வதற்கான அதிகாரம் ஏதும் கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 3ம் தரப்பினர் செய்யும் அன்னதானத்திற்கு பொது மக்களிடம் பணம் வசூல் செய்து செலவு செய்கிறார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 3ம் தரப்பினர் செய்யும் அன்னதானத்திற்கு கோவில் பணத்தை எடுத்து கொட்டகை போட்டு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் தரப்பினர் செய்யும் அன்னதானத்திற்கான வரவு செலவு கணக்குகளை பற்றி வருடம் வருடம் 3ம் தரப்பினர் வெளியீட்டு வருவதை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் தரப்பில் 3ம் தரப்பினர் செய்யும் அன்னதானத்திற்கான வரவு செலவு கணக்குகள் சுமார் ரூ.3 லட்சம் அல்லது ரூ.4 லட்சம் உள்ள புத்தகத்தை

பார்க்கவில்லை என இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி மாரியப்பன் அசல் வழக்கில் தன்னை ஒரு தரப்பினராக சேர்க்ககோரி மனு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் 5 ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். 2012 ம் ஆண்டு கார்த்திகை சோமவார திருவிழா நடந்த சமயத்தில் நான் தாவா கோவிலில் செயல் அலுவலராக பணியில் இருந்தேனா என்றால் இல்லை. 2012 ம் ஆண்டில் 3-ம் தரப்பினருக்கு செய்த வரவு செலவு கணக்கு ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை மேற்கண்ட ஆண்டிற்கான வரவு செலவு கணக்கு விபரங்கள் அனைத்தும் தணிக்கை செய்ய திருவாரூர் உதவி ஆணையர், இந்து அறநிலை துறை அவர்களுக்கு அனுப்பப்பட்டதால் பார்க்கமுடியவில்லை. 2018 ம் ஆண்டில் சம்பத்குமார் செயல் அலுவலராக இருந்தபோது அவர் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் திருவாரூர் உதவி ஆணையர், இந்து அறநிலை துறை அவர்களுக்கு தணிக்கைக்காக அனுப்பப்பட்டது என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதி மாரியப்பன் என்பவரின் சொந்த ஊர் பரகலகோட்டை என்றால் சரிதான். மாரியப்பன் கோவிலுக்கு சொந்த செலவில் என்ன என்ன செலவுகள் மற்றும் உபகரனங்கள் வாங்கிகொடுத்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 5 ம் பிரதிவாதி மாரியப்பன் கோவிலுக்கு பல உபயங்கள் செய்துகொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 5-ம் பிரதிவாதி நல்லெண்ணத்தின் அடிப்படையில் அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டது சரியா என்றால் நல்லெண்ணத்தின் பேரில் உள்நோக்கம் உள்ளது. அருள்மிகு பொது ஆவுடையார் (எ) மத்தியபுரீஸ்வரர் கோவிலில் கடந்த 20 ஆண்டுகளாக திருவிழா காலங்களில் டீக் கடை, டிபன் கடை, ஐஸ்கிரிம் கடை, பலகார

கடைகள் உள்ளதை நான் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். மேற்படி கோவிலுக்கு சொந்தமான நிதியிலிருந்து 3ம் தரப்பினருக்கு செய்துகொடுத்த செலுவுகளை வசூல் செய்ய வாதி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா கோவிலும் கோவிலில் உள்ள சொத்துக்களும் சேரன்குளம் சின்ன ராமனுஜ அய்யங்கரர் என்பவரால் அமைக்கப்பட்டு சொத்துக்கள் கோவிலுக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கோவிலை ராமனுஜ அய்யங்கரர் அவர்களின் வாரிசுதாரர்கள் படிப்படியாக கோவில் மற்றும் கோவில் சொத்துக்களை நிர்வாகம் செய்துவந்தார்கள் என்றால் சரிதான். வாதியும் 1-ம் பிரதிவாதியும் ராமனுஜ அய்யங்கரர் என்பவரின் பின்தோன்றல் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதியும் 1-ம் பிரதிவாதியும் பரம்பரை அறங்காவளர்கள் என்றால் சரிதான். தற்சமயம் 1-ம் பிரதிவாதியை இந்து சமய அறநிலை துறை மூலமாக அறங்காவர் பதவியிலிருந்து பணி நீக்கம் செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த எஸ்.ஆர். ராமனுஜம் என்பவர் இறந்துவிட்டதால் அவரது வாரிசான முரளிதரன் என்பவரை இந்து சமய அறநிலை துறை மூலமாக பரம்பரை அறங்காவளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். நான் 4-ம் பிரதிவாதிக்கு மட்டும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் அருள்மிகு பொது ஆவுடையார் (எ) மத்தியபுரீஸ்வரர் கோவிலில் செயல் அலுவலராக பணி ஏதேனும் புரிந்துள்ளேனா என்றால் 01.07.2020 முதல் 15.02.2021 கூடுதல் பொறுப்பாக இருந்து பணி செய்துவந்துள்ளேன். 01.04.2022 லிருந்து நாளது தேதிவரை கூடுதல் பொறுப்பாக பணி செய்துவருகிறேன். வழக்கு காலக்கட்டங்களில் நான் மேற்படி கோவிலில் பணியாற்றவில்லை. வேறு

காலங்களில் மேற்படி கோவிலில் ஏதேனும் பணி புரிந்தேனா என்றால் 2019ம் ஆண்டில் சிறப்பு பணியில் இருந்தேன். தாவா கோவில் சிவன் ஸ்தலம் என்றால் சரிதான். மேற்படி கோவிலில் சிவன் உருவமோ, சிவ லிங்கமோ கிடையாது என்றால் சரிதான். தாவா கோவிலில் வெள்ளாலமரம்தான் இறைவனாக கருதப்படுகிறது என்றால் சரிதான். தாவா கோவிலின் பிரசாதம் என்பது திருநீற்றுடன் இலைகளை வழங்குவது வழக்கம் என்றால் இல்லை திருநீறு மட்டும்தான் வழங்குவார்கள் இலைகளை பக்தர்களை பரித்து செல்வார்கள். தாவா கோவிலை பொறுத்தவரை அந்த இலையைதான் பக்தர்கள் பிரசாதமாக கருதுகிறார்கள் என்றால் சரிதான். தாவா கோவில் பகல் நேரங்களில் திறப்பதில்லை என்றால் சரிதான். எப்போது கோவில் நடை திறக்கப்படும் என்றால் திங்கள்கிழமை மட்டும் இரவு 12.00 மணிக்கு நடை திறக்கப்படும். வருடத்தில் தை-1ம் தேதி ஒரு நாள் மட்டும் பகலும் நடை திறந்திருக்கும் என்றால் சரிதான். தாவா கோவிலில் தை-1ம் தேதியை தவிர மற்ற நாட்களில் வேறு சிறப்பு விஷேசங்கள் உண்டா என்றால் கார்த்திகை சோமவர விழா நடைபெறும். கார்த்திகை மாதம் 4 திங்கள் கிழமையும் விஷேசங்கள் நடைபெறுமா என்றால் நடைபெறும். மற்ற திங்கள் கிழமைக்கும் கார்த்திகை திங்கள் கிழமைக்கும் என்ன வித்தியாசம் என்றால் வழக்கம்போல் அபிசேகம் மற்றும் ஆரதணை நடைபெறும். கோவில் சார்பாக விஷேசங்கள் நடைபெறுமா என்றால் இல்லை. தாவா கோவிலில் வெள்ளாலமரத்தை சுற்றி பிரகாரமும், முன் புறம் மகா மண்டபம் உள்ளது என்றால் சரிதான். அந்த மகா மண்டபம் இடிக்கப்பட்டு புது மண்டபம் கட்டப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அந்த மகா மண்டபம் என்பது சுமார் 600 அடி நீளம் 100 அகலமும் இருக்கும் என்றால் சரிதான். இந்த

வழக்கில் கண்ட வாதி ஏற்கனவே இருந்த பழைய மகா மண்டபம் நல்ல நிலையில்தான் இருந்தது என்றும் அதை இடிக்ககூடாது என இந்நீதிமன்றத்தில் ஓ.எஸ்.198/2010 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் தெரியும். வாதி அசல் வழக்கை தாக்கல் செய்யும்போது மேற்கண்ட அசல் வழக்கு எண் 198/2010 என்ற வழக்கை சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 198/2010 என்ற வழக்கு விபரத்தை நான் படித்து தெரிந்துகொள்ள முயற்சி செய்தேனா என்றால் எனக்கு முன்பு இருந்த நிர்வாக அலுவலர் அந்த வழக்கு கோப்புகளை என்னிடம் ஒப்படைத்தாரா இல்லையா என்பதை பொறுப்பு ஒப்படைப்பு பட்டியலை பார்த்தால்தான் சொல்ல இயலும். அசல் வழக்கில் 4-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் கையொப்பம் போட்டுள்ளது நானா என்றால் நான் இல்லை. வாதி தாக்கல் செய்த வழக்குரை மற்றும் 4-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர் வழக்குரை ஆகியவற்றை படித்து பார்த்து உண்மை தண்மை அறிந்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 85/1981 என்ற வழக்கினை வாதியின் தகப்பனார் ரெங்கசாமி அய்யங்கார், 1-ம் பிரதிவாதி மீதும், இந்து அறநிலைதுறை மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 2018 ம் ஆண்டில் இந்த கோவில் செயல் அலுவலர் மற்றும் ஒரு பணியாளர் கோவில் பணத்தை கையாடல் செய்தது சம்பந்தமாக பணிநீக்கம் செய்யப்பட்டார்கள் என்றால் சரிதான். இந்த கோவிலில் பரம்பரை அறங்காவர்களுக்கு பதிலாக எப்போது செயல் அலுவலர்களை இந்து அறநிலை துறை மூலமாக நியமிக்கப்பட்டார்கள் என்றால் தெரியாது. 2 பரம்பரை அறங்காவர்களின் திட்டங்கள் மற்றும் வரவு

செலவுகளை ஒப்புதலின் அடிப்படையில்தான் செயல் அலுவலர் செயல்பட முடியும் என்றால் சரிதான். நான் தன்னிச்சையாக வரவு செலவு செய்யமுடியாது என்றும் திட்டங்கள் வகுக்க முடியாது என்றால் சரிதான். செயல் அலுவலரின் அதிகாரம் என்பது பரம்பரை அறங்காவர்களின் அதிகாரத்திற்கும், ஒப்புதலுக்கு உட்பட்டது என்றால் அதிகாரத்திற்கு உட்பட்டதல்ல, ஒப்புதலுக்கு உட்பட்டது. தாவா கோவிலும் கோவிலுக்கு சொந்தமான சொத்துக்களும் சேரன்குலம் சின்னராமனுஜா ஐயங்கார் அவர்கள் குடும்பத்தில் 1885 ல் ஏற்படுத்திக்கொண்ட ஆவணத்தின் அடிப்படையில் நிர்வாகம் அவர்கள் குடும்ப நிர்வாகத்தில் இருந்தது என்றால் சரிதான். 1903 மற்றும் 1913 ல் அவர்கள் குடும்பத்தில் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவின் படி 2 கிளைகளாக நிர்வாகம் செய்ய வேண்டும்மென மேற்படி பாகபத்திரத்தில் வழிவகை செய்யப்பட்டது என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி சடகோபராமனுஜம் என்பவர் கோவில் சொத்துக்களை கிரையம் செய்தும், கோவிலுக்கு சொந்தமான நகைகளை விற்பனை செய்தது சம்மந்தமாக ஊர் பொதுமக்கள் சார்பாக ஒரு 5 நபர்கள் மட்டும் தஞ்சாவூர் சார்பு நீதிமன்றத்தில் O.A.No.18/1968 என்ற வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பில் 1-ம்பிரதிவாதி செய்த செயல்கள் தவறு என்றும் நிர்வாக பதிவிலிருந்து நீக்கம் செய்து ஒரு Scheme Frame செய்யவேண்டும் என தீர்ப்பு ஏற்பட்டுள்ளது பற்றிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பின்னிட்டு இந்து அறநிலைதுறை இணை ஆணையர் அவர்கள் மீண்டும் 1-ம் பிரதிவாதியை பரம்பரை அரங்காவளராக நியமிக்கப்பட்டார் என்றால் சரிதான். O.A.No.18/1968 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் தக்கார் என்ற ஒரு நபரை நியமணம் செய்துள்ளதை ரத்து செய்துவிட்டு 1-ம் பிரதிவாதியை பரம்பரை அரங்காவளராக நியமிக்கப்பட்டார்

என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. O.A.No.18/1968 வழக்கில் இந்து அறநிலைதுறை இணை ஆணையரும் ஒரு தரப்பினர் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதியின் தகப்பனாரை 1-ம் பிரதிவாதி செயல்படவிடாமல் தடுத்ததால் அ,வ.எண் 85/1981 பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி அ,வ.எண் 85/1981 வழக்கில் இந்து அறநிலைதுறை இணை ஆணையரும் ஒரு தரப்பினர் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண் 85/1981 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பை எதிர்த்து 1-ம் பிரதிவாதி சென்னை உயர் நீதிமன்றத்தில் A.S.No.156/1984 என்ற வழக்கை தாக்கல் செய்து தள்ளுபடி செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ரெங்கசாமி ஐயங்கார் இறந்தபிறகு அவர் மகன் S.R.ராமனுஜம் என்பவர் பரம்பரை அரங்காவலராக நியமிக்ககோரி இந்து அறநிலைதுறையை சேர்ந்த 2,3 பிரதிவாதிகளிடம் மனு கொடுத்தும் பரம்பரை அரங்காவலராக நியமனம் செய்யாததால் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் பரம்பரை அரங்காவலராக நியமனம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி சடகோபராமனுஜம் சம்மதத்துடன் 1991ல் இந்துஅறநிலைதுறை மூலமாக செயல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி செயல் அலுவலரை நியமியக்கப்பட்டது தவறு என்று S.R.ராமனுஜம் என்பவர் இந்துஅறநிலைதுறை ஆணையரிடம் மனு கொடுத்து பின்னர் விசாரணை செய்து அந்த மனு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி S.R.ராமனுஜம் என்பவர் இந்துஅறநிலைதுறை ஆணையர் பிறப்பித்த உத்தரவின் மீது சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண் 20731/2014 என்ற வழக்கு நிலுவையில்

உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நீதிப்பேராணை மனு எண் 20731/2014 என்ற வழக்கில் 2,3,4 பிரதிவாதிகள் தரப்பினர்களாக உள்ளார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 2 பரம்பரை அரங்காவலர்களின் ஒப்புலுடன் செயல் அலுவலர் செயல்படவேண்டும் என்றால் சரிதான். திட்டங்கள் தீட்டுதல், செலவுகள் செய்வதற்கு செயல் அலுவலருக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. தாவா கோவிலுக்கு செயல் அலுவலர் நியமணம் செய்து அவருக்கு என்ன என்ன அதிகாரம் என வரையறை செய்யப்பட்டுள்ளதை பார்த்துள்ளீர்களா என்றால் பார்க்கவில்லை. மேற்படி உத்தரவின் அடிப்படையில்தான் எனது பணி நியமணமும் உள்ளது என்றால் சரிதான். என்னை தாவா கோவிலுக்கு கூடுதல் பொறுப்பு செயல் அலுவலராக நியமனம் செய்யப்பட்ட உத்தரவை அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை. நியமிக்கப்படும் செயல் அலுவலர்கள் பரம்பரை அரங்காவலர்களின் ஒப்புதல் மற்றும் சம்மதத்துடன் செயல்படவேண்டும் என்றால் சரிதான். ரெங்கசாமி ஐயங்கார் பரம்பரை அரங்காவலராக செயல்படுவதை 1-ம் பிரதிவாதி தடுத்ததாலும் அறநிலைதுறை அவருக்கு ஆதரவாக இருந்ததாலும் ரெங்கசாமி ஐயங்கார் பட்டுக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ எண்.557/95 என்ற வழக்கை தாக்கல் செய்து கூட்டாகவும் இருவர்கள் சம்மதத்துடனும் கோவில் நிர்வாகம் செயல்படவேண்டும் என தீர்ப்பு ஏற்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. கோயில் நிர்வாகம் சம்மந்தமாக இந்து அறநிலை துறை சட்டப்பிரிவு 45 ன் படி செயல் அலுவலர் பரம்பரை அறங்காவலர்களுடன் செயல்பட நியமணம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி பரம்பரை அறங்காவர்களின் சம்மதம் மற்றும் ஒப்புதல் இல்லாமல் செய்ல

அலுவலர் புதிதான திட்டங்கள் மற்றும் செலவுகள் செய்வதோ முடியாது என்றால் சரிதான். தனி நர்பகள் கோவில் பெயரை பயன்படுத்தி பணம் வசூலிக்க முடியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.,ஆ.10 ல் தனி நபர்கள் கோவில் பெயரை பயன்படுத்தி அன்னதானத்திற்கு பணம் வசூலித்து அதற்கு வரவு செலவு கண்க்கு புத்தகமாக அச்சடித்து வெளியிட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.. அதுபோல் வெளியிடுவது தவறு. நான் அந்த புத்தகத்தை பார்த்ததில்லை இப்போதுதான் பார்க்கிறேன். வா.சா.,ஆ.10 ஆவணத்தின் புத்தகத்தில் மொத்த வரவு ரூ0,90,184/- என்றும், செலவு ரூ.7,10,584/- என்னும், மீதி கையிருப்பு ரூ.3,79,600/- என கண்டுள்ளது . 10.12.2012 ல் நடந்த சோமவார திருவிழாகாலத்தில் தனி நபர்களால் செய்யப்பட்ட அன்னதானத்திற்கு கோவில் செலவில் அன்னதான கொட்டகை அமைத்து கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல . கோவில் தேவஸ்தானம் பக்தர்கள் ஓய்வெடுக்கும் கொட்டகையை போட்டுகொடுக்கப்பட்டுள்ளது . என்னிடம் காட்டப்படும் வா.சா,ஆ.11 ஆவணம் தாவா கோவில் செயல் அலுவலர் கொடுத்த சான்று என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ 11 ஆவணத்தில் அப்போது இருந்த செயல் அலுவலர் அன்னதான கொட்டகைக்கு பணம் பட்டுவாட செய்த விபரம் ரூ.1,69,007/- என உள்ளது என்றால் சரிதான். தாவா கோவில் நிர்வாகம் அன்னதானம் வழங்கும் நடைமுறையில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ 10 படி தனிநபர்கள் செய்த அன்னதானதத்திற்கு வா.சா.ஆ.11 படி தொகை வழங்கப்பட்டுள்ளது என்றால் அப்படி என்றால் அது தவறு. மேற்கண் வா.சா.ஆ.11 ஆவணத்தில் கண்ட ரூ.1,69,007/- யை எதற்காக செலவு செய்யப்பட்டது என்றால் பக்கதர்கள் மழைகலங்களிலும், ஓய்வு எடுப்பதற்காகவும் போடப்பட்ட கொட்டகை

ஆகும். வா.சா.ஆ.11 ல் பக்தர்கள் ஓய்வு அறைக்காக என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1998 ல் இருந்து 2011 ம் ஆண்டு வரை அன்னதான கொட்டகைக்காக கோவில் நிர்வாகம் சார்பாக கொட்கை போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோவில் நிதியிலிருந்து அன்னதானகொட்டகை அமைக்கப்படுவதற்கு எஸ்.ஆர்.ராமனுஜம் பரம்பரை அறங்காவலர் ஆட்சேபணை தெரிவித்துள்ளார் என்றால் 2011 ல் தீர்மானத்தை மறுத்துள்ளார் ஆனால் 2012 ல் அதே தீர்மானத்தை ஒப்புதல் அளித்து நடைமுறைபடுத்தியும் உள்ளார். எஸ்.ஆர்.ராமனுஜம் என்பவர் 2011 ல் தீர்மானத்தை மறுத்துள்ளார் என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். மேற்படி தீர்மானம் எந்த தேதியில் ஏற்பட்டது என்றால் ஆவணத்தை பார்த்தான் சொல்லமுடியும். பரம்பரை அரங்காவலர்களின் ஒப்புதல் பெற்று தீர்மானத்தின் அடிப்படையில் செலவு மேற்கொள்ள இயலும். கோவில் சொத்துக்களை பரமரிப்பதும், பாதுகாப்பதும் பரம்பரை அறங்காவலர்கள் உதவியுடன் செயல் அலுவலர்கள் செயல் படுவார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 விதி 4 டி -ல் செயல் அலுவலர் பரம்பரை அறங்காவலர்களின் முன் அனுமதியின்றி எந்த செலவுகளும் செய்யமுடியாது என உள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு மாதமும் வரவு செலவு கணக்குகளை செயல் அலுவலர் பரம்பரை அறங்காவரிடம் ஒப்படைக்கவேண்டும் என்றால் சரிதான். செயல் அலுவலர் வருடாந்திர வரவு செலவு கணக்குகளை முன்பே தயார் செய்து பரம்பரை அறங்காவலர்கள் அனுமதி பெற்று தான் செலவு செய்ய வேண்டும் என்றால் பரம்பரை அறங்காவரிடம் தீர்மானம் பெற்று அந்த தீர்மானத்தின்பேரில் ஆணையரிடம் அனுமதி பெற்று செயல்படுத்த முடியும். மேற்படி பி.வா.ஆ .1 - விதி 5-ல் நான்

சொல்வதுபோல் ஆணையரிடம் அனுமதி பெற்றுதான் செயல்படுத்த முடியும் என்று இல்லை என்றும் பரம்பரை அறங்காவரிடம் அனுமதி பெற்று செலவு செய்ய வேண்டுமென கண்டுள்ளது என்றால் சரிதான். அனைத்து ஆவணங்களும், கணக்கு வழக்குகளும் செயல் அலுவலரிடம் தான் இருக்க வேண்டும் என்றால் சரிதான். பரம்பரை அறங்காவலர்கள் கணக்கு வழக்குகளை கேட்டார் செயல் அலுவலர் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். கோயில் சொத்துக்களை குத்தைக்கோ, வாடகைக்கோ விடுவதற்கு பரம்பரை அறங்காவலர்களுக்குதான் உரிமை உள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே கோவில் மண்டபம் இடிக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி வைஷ்ணவர் என்பதால் சிவஸ்தலமான தாவா திருக்கோவில் சன்னதிக்கு வருவதையும், பூஜையில் கலந்து கொள்வதையும் வாதி வேண்டுமென்றே தொடர்ந்து தவிர்த்து வருகிறார் என்றால் சரியல்ல. திருக்கோவிலுக்கு எதிராக செயல்பட்டுள்ளாரா என்றால் இல்லை. வாதி பக்தர்களின் மனம் புண்படும்படி ஏதேனும் செய்துள்ளாரா என்றால் இல்லை. பக்தர்களுக்கு கோவில் நிர்வாக கட்டாயம் உணவு வழங்கவேண்டுமா என்றால் இல்லை. தாவா கோவில் நிர்வாகம் தினம்தோறும் மதியம் மட்டும் அன்னதானம் வழங்கப்பட்டுவருகிறது. மதியம் கொடுக்கும் அன்னதானம் அரசு கொடுக்கும் அன்னதானம் என்றால் சரிதான். எனது எதிர்வ வழக்குரையில் பாரா 14 ல் தாவா கோவிலில் மூலமாக பொதுமக்களுக்கு அன்னதானம் என்று ஏதும் தாவா திருக்கோவிலில் செய்வதில்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதி நாளது தேதிவரை தாவா கோவிலில் அன்னதான கொட்டகை அமைப்பதற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்றும் ஆட்சேபணைதான் செய்து வருகிறார் என்றால்

சரிதான். அது சம்மந்தமாக நடைபெற்ற தீர்மானத்திலும் ஆட்சேபணை செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி ஆட்சேபணை தெரிவித்து பல கடிதங்கள் செயல் அலுவலருக்கு எழுதியுள்ளார் அதற்கு எந்த பதிலும் அனுப்பவில்லை என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தனிநபர்கள் அன்னதானத்திற்கு வசூலிக்கும் தொகையில் மிஞ்சும் தொகையில்தான் அன்னதானகொட்டகை போடவேண்டும் என வாதி சொல்வதில் தவறு ஏதுமில்லை. வாதி கூட்டங்களுக்கெல்லாம் கலந்து கொண்டுதான் வருகிறார் என்றும், கலந்து கொல்லவில்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. ரூ.1,69,007/- செலவு செய்வதற்கு பரம்பரை அரங்காவலரிடம் அனுமதி வாங்கவேண்டும் என்றால் சரிதான். மேற்படி ரூ.1,69,007/- செலவு செய்வதற்கு வாதி பரம்பரை அரங்காவலர் மறுத்தால் இணை ஆணையிரிடம் அனுமதி பெற்று மேற்படி செலவு மேற்கொள்ளப்பட்டது. கோவில் பணத்தை அங்கரிக்கப்படாத செலவினங்களுக்கு செய்து நஷ்டம் ஏற்படுத்தியதால் 1 முதல் 4 பிரதிவாதிகள் பொறுப்பாவர்கள் என்றால் சரியல்ல. மேற்கண்ட மேற்படி ரூ.1,69,007/- தை செலவு செய்ய இணை ஆணையிரிடம் அனுமதி பெற்றதற்கான உத்தரவை ஏதேனும் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

நான் தாவா கோவில் நிர்வாகத்தில் எவ்வளவு நாட்களாக பணிபுரிந்தேன் என்றால் 01.04.2022 முதல் 05.09.2022 வரை பணிபுரிந்தேன். மேற்கண்ட காலத்தை தவிற வேறு நாட்களில் மேற்படி கோவிலில் நிர்வாக அதிகாரியாக கூடுதல் பொறுப்பு பணிபார்த்து வந்தேன் என்றால் சரிதான் தேதி ஞாபகமில்லை. தாவா கோவில் பரகலக்கோட்டையில் உள்ள சிவன் கோவில் என்றால் சரிதான். மேற்படி

சிவன்கோவிலின் சிவன் பெயர் பொது ஆவுடையார் (எ) மத்தியபுரீஸ்வரர் என்றால் சரிதான். இதை தவிர அங்கு 2 உப கோவில்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 உப கோவில்களின் பெயர்கள் 1. அருள்மிரு நாகநாதன் சுவாமி திருக்கோவில், 2 . அருள்மிகு பாலடியார் சுவாமி திருக்கோவில் என்றால் சரிதான். மேற்படி 3 கோவில்களும் சேர்ந்து ஒரே நிர்வாகம் என்றால் சரிதான். பொது ஆவுடையார் (எ) மத்தியபுரீஸ்வரர் கோவில் வருடத்தில் ஒரே நாள் பொங்கல் தினத்தன்று தான் பகல் தரிசனம் என்றால் சரிதான். மற்ற நாட்களில் பகல் தரிசனம் கிடையாது என்றால் சரிதான். வார நாட்களில் திங்கள்கிழமை மட்டும் இரவு தரிசனம் உண்டு என்றால் சரிதான். அது நள்ளிரவு 12.00 மணிக்கு என்றால் சரிதான். கோவிலை நிர்வாகம் பன்ன கூடிய உரிமை 2 பரம்பரை அரங்காவலருக்கும், 1 நிர்வாக அதிகாரிக்கும் உண்டு என்றால் சரிதான். ஒவ்வொரு வருடம் கார்த்திகை மாதம் கடைசி சோமவாரத்தில் விசேசம் என்றால் சரிதான். அசல் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 4,5 பிரதிவாதிகள் தான் தாவா கோவிலுக்கு பரம்பரை அறங்காவலர்கள் என்றால் சரிதான். அசல் வழக்கில் கண்ட 5 ம் பிரதிவாதி S.R.ராமனுஜம் இறந்துவிட்டதால் 7-ம் பிரதிவாதியான முரளிதரன் என்பவர் பரம்பரை அறங்காவலராக உள்ளார்கள் என்றால் சரிதான். வாதி மாரியப்பன் என்பவர் பரக்கலக்கோட்டை கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். தாவா கோவிலில் வாதியும் ஒரு வழிபாட்டுதாரர் என்றால் சரிதான். வாதி தாவா கோவில் நலனில் அக்கரை கொண்டவர் என்றால் சரிதான். வாதி கோவிலுக்கு நிரைய உபயம் செய்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 4-ம் பிரதிவாதி சடகோப ராமானுஜம் கோவில் சொத்துக்களை விற்ககூடாது என வாதி மாரியப்பன் என்பவர் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.345/1992 ல் சடகோப ராமானுஜம் மற்றும் அவரது வகையறா பெயரில் வழக்குதாக்கல் செய்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதி வழக்குரையில் கூறியுள்ள விபரங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். நான் வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக அ.வ.எண்.345/1992 வழக்கு விபரங்களை தெரிந்துகொண்டேனா என்றால் இந்தவழக்கிற்கு தொடர்பு இல்லாததால் படித்துப்பார்க்கவில்லை. நான் வழக்குரையில் கண்ட விபரங்களுக்கு பதில் சொல்ல கடமை பட்டவர் என்றும், சரியான விபரங்கள் தெரிந்துகொள்ளாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.345/1992 வழக்கு வாதி மாரியப்பனுக்கு ஆதரவாக தீர்ப்பாகயுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி தீர்ப்பானது கோவில் நலனுக்கு சாதகமானது தான் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்பை எதிர்த்து

4-ம் பிரதிவாதிகளிடம் பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றதில் A.S.31/1998 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மேலமுறையீட்டு வழக்கு 01.02.1999 ல் சொத்துவிபரம் சரியாக விபரக்கப்படவில்லை என்ற காரத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேல்முறையீடு வழக்கை எதிர்த்து வாதி மாரியப்பன் சென்னை உயர்நீதிமன்றத்தில் 2-ம் மேல்முறையீடு எண்.653/1999 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதி மாரியப்பன் கோவில் நலனையும், கோவில் சொத்துக்களை பாதுகாப்பதிலும் அக்கரை கொண்டவர் என்றால் சரிதான். வாதி மாரியப்பன் அவர் சொந்த பணத்தை கொண்டு தான் தாவா வழக்கும், ஏற்கனவே தாக்கல் செய்த வழக்குகளை நடத்து வருகிறார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. கோவிலை நிர்வாகம் செய்வதிலும், முடிவுகள் எடுப்பதிலும் 3,4,7 ஆகியோர்களை தவிர வேறு தனி நபர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரிதான். கோவில் முன்மண்டபத்தில் 750-1000 நபர்கள் உணவு அருந்தலாம் என்றால் சரிதான். பொதுவாக திருவிழா காலங்களில் சுமார் எவ்வளவு பக்கதர்கள் வந்து செல்வார்கள் என்றால் சுமார் 50 ஆயிரம் நபர்கள் வந்து செல்வார்கள். பொதுவாக பக்தர்கள் வருவார்கள் தரிசனம் பார்த்து முடித்துவிட்டு செல்வார்கள் என்றால் சிலமணி நேரம் காத்திருந்து தரிசனம் முடித்துவிட்டு செல்வார்கள். இரவு நேர தரிசனத்தை விட பகல் நேர தரிசனத்தம் விரைவாக முடித்துவிட்டு செல்வார்கள் என்றால் சரிதான். விசேச காலங்களில் நான் பணியில் இருந்து மேற்பார்வை செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். கோவில் முன் மண்படத்திற்கு கீழ் புறம் விசேச காலங்களில் தற்காலிகமாக செட் போடுவோம் என்றால் சரிதான். மேற்படி தற்காலிகசெட்டில் சுமார் 50 நபர்கள் உணவு அருந்தலாம் என்றால் சரிதான்.E.O அலுவலகத்திற்கு பின்புறம் ஒரு செட் உள்ளது என்றால் சரிதான். அதில் சுமார் 500 நபர்கள் உட்கார்ந்து உணவு அருந்த வசதி உள்ள இடம் என்றால் சரிதான். பாலடியார் கோவில் அருகில் உள்ள மண்டபம் நமக்கு நாமே என்ற திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட மண்டபம் உள்ளதா என்றால் உள்ளது ஆனால் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்டதா என்றால் தெரியாது. மேற்படி மண்டபத்தில் சுமார் 2000 நபர்கள் உணவு அருந்தும் இடம் வசதி உள்ளது என்றால் சரியல்ல சுமார் 500 நபர்கள் தான் உணவு அருந்தும் இடம் வசதி உள்ளது. நான் தவறாக சொல்கிறேன் என்றும் சுமார் 1500-2000 நபர்கள் வரை உணவு அருந்தலாம் என்றால் சரியல்ல. கோவிலில் ஏதேனும் கமிட்டி அமைக்க எனக்கு அதிகாரம் உண்டா என்றால்

இல்லை. ஆணையருக்கு தான் உண்டு. தாவா கோவிலில் ஆணையர் அன்னதான கமிட்டி அமைக்க ஏதேனும் உத்தரவு பிரப்பித்துள்ளாரா என்றால் இல்லை. நிர்வாக அதிகாரி நேரடியாக கமிட்டி அமைக்க முடியாது என்றால் சரிதான். கமிட்டி அமைக்க வேண்டும் என்றால் அறங்காவலரின் ஒப்புதல் பெறப்பட்டு, நிர்வாக அலுவலர் ஆணையரிடம் அனுமதி பெற விண்ணப்பம் செய்ய வேண்டும். செயல் அலுவலர் ஆணையரிடம் விண்ணப்பம் செய்ய எழுத்து மூலம் தீர்மானம் இருக்க வேண்டும் என்றால் சரிதான். தாவா கோவிலுக்கு அன்னதாக சம்பந்தமாக தீர்மான கமிட்டி ஏதும் இல்லை என்றால் சரிதான். ஆணையர் உத்தரவு எழுத்து மூலமாக உள்ளதா என்றால் தீர்மானம் இல்லாததால் உத்தரவு இல்லை. கோவில் நிர்வாகம் சார்பாக பொதுமக்களுக்கு குடிநீர், கழிப்பறை வசதி உண்டா என்றால் உண்டு. தாவா கோவிலின் பிள்ளையார் சன்னதிக்கு முன்புரம் ஒரு செட் உள்ளதா என்றால் உள்ளது. அந்த செட்டில் ஒரே நேரத்தில் எவ்வளவு நபர்கள் அமரலாம் என்றால் 50 நபர்கள் அமரலாம். விசேசகாலங்களில் விநாயகருக்கு முன்புரம் போடப்படும் தற்காலிக செட்டில் எவ்வளவு நபர்கள் உணவு அருந்தலாம் என்றால் சுமார் 200 நபர்கள் உணவு அருந்தலாம். மேற்படி தற்காலிக செட்டுகளை பொறுத்து வாதியும் மற்ற நபர்களும் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். பாலடியார் கோவிலில் 4 கழிவறை கட்டிடம், 1 உடைமாற்றும் அறை, 1 குழியல் அறை உள்ளது என்றால் சரிதான். மேற்படி கட்டிடங்கள் ரூ.4,00,000/- கட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு 10 ல் 1 பங்கு வீதம் 40,000/- கொடுத்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கட்டிடங்கள் பக்கத்தில் வாதி மாரியப்பன் 72,000/- செலவில் கழிப்பறை கட்டிடம் கட்டியுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 2018 ல் சம்பத்குமார் என்பவர் நிர்வாக அதிகாரியாக இருந்தார் என்றால் சரிதான். அவர் நிர்வாக அதிகாரியாக இருந்தபோது கோவில் சார்பில் நிதி வசூல் செய்து அன்னதானம் செய்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.